# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
முதலாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 1st Term Examination - 2021

FWC

**கணக்கீடு**
**Accounting**

Three Hours 10 min | Gr -12 (2022) | 33 | T | I,II

சுட்டெண் :- …………………..

**அறிவுறுத்தல்கள்:-**

- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவும் நான்கு புள்ளிகளைக் கொண்டது.
- உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

## பகுதி I

01. தீர்மானம் எடுத்தலுக்கான தகவல்களை அக்கறையுடையோருக்கு வழங்குவது என்பது குறிப்பிடுவது எது?
   1) கணக்கீட்டு தொழிற்பாடுகள் 2) கணக்கீட்டு மரபுகள்
   3) கணக்கீட்டு எண்ணக்கருக்கள் 4) கணக்கீட்டின் அடிப்படை நோக்கம்
   5) கணக்கீட்டின் உள்ளீடுகள் (………..)

02. பின்வருவனவற்றுள் நிதிக் கணக்கீட்டின் செயன்முறையாக எது கருதப்படும்?
   1) இனங்காணலும் அளவிடலும் 2) திட்டமிடல் 3) பாதீடு தயாரித்தல்
   4) கட்டுப்படுத்தல் 5) கிரயக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல் (………..)

03. “ஆதனம் பொறி மற்றும்” உபகரணங்களுக்கு கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தேய்விடுதல்”. பின்வருவனவற்றுள் எச்சூழலுடன் பொருந்துகின்றது.
   1) பொருளாதார அரசியல் சூழல் 2) சட்டச் சூழல்
   3) தொழில்நுட்பச் சூழல் 4) நுட்ப மற்றும் தொழில்சார் சூழல்
   5) சமூக கலாசாரச் சூழல் (………..)

04. பின்வருவனவற்றுள் கணக்கீட்டின் வெளியீடு ஒன்றாக கருதப்பட முடியாதது எது?
   1) வருமானக் கூற்று / இலாபநட்டக்கூற்று 2) நிதி நிலைமைக்கூற்று
   3) காசுப்பாச்சல் கூற்று 4) உரிமைமாற்றல் கூற்று
   5) பரீட்சை மீதி (………..)

05. நிதியாண்டுக்குரிய வருமானங்களுக்கும், செலவீனங்களுக்கும் இடையிலான வேறுபாடு குறிப்பிடுவது.
   1) உரிமையாண்மை மாற்றம் 2) நிதி நிலைமை 3) நிதி நிலைமை மாற்றம்
   4) காசில் ஏற்பட்ட மாற்றம் 5) நிதிப் பெறுபேறு (………..)

06. சொத்துக்கள் தொடர்பாகக் கூறப்பட்டுள்ள பின்வரும் கூற்றுக்களில் சரியானது அல்லது சரியானவை எவையென்பதனைக் காட்டும் தொகுதி.

A – எதிர்கால நிகழ்வின் விளைவாகத் தோன்றியிருத்தல்.

B – எதிர்கால பொருளாதார நலன்கள் உட்பாச்சக் கூடியதாக இருத்தல்.

C – வணிகத்தினால் கட்டுப்படுத்தக் கூடியதாக இருத்தல்.

D – சொத்து தொடர்பான சட்ட பூர்வமான உரிமை எப்போதும் வணிகத்துக்கு உரியதாகக் காணப்படல்.

1) A B C  2) B C D  3) B C  4) A C  5) A B C D ஆகிய எல்லாம்

(………..)

07. ஆதி வணிக்கத்தின் 2020 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் தகவல்கள் சில பின்வருமாறு.

| | ரூபா 000 |
|---|---|
| 01.04.2020 இல் தேறிய சொத்துகள் | 240 |
| 01.04.2020 இல் மொத்தப் பொறுப்புகள் | 160 |

ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

கடன் கொள்வனவு ரூபா 36 000

ரூபா 80 000 கிரயமான பொருட்கள் ரூ 104 000 இற்கு கடனுக்கு விற்கப்பட்டது.

ஆதனம் பொறி உபகரணங்களுக்கான வருடத்தேய்வு ரூ 36 000

01.04.2020 இல் மொத்தச் சொத்துக்களும் 30.04.2020ல் தேறிய சொத்தும் முறையே.

| | மொத்தச் சொத்துக்கள் (01.04.2020) | தேறிய சொத்துக்கள் (30.04.2020) |
|---|---|---|
| 1) | 400 000 | 421 000 |
| 2) | 400 000 | 228 000 |
| 3) | 400 000 | 412 000 |
| 4) | 240 000 | 80 000 |
| 5) | 400 000 | 261 000 |

(………..)

08. கண்ணம்மா வணிகத்தின் 31.12.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான சில தகவல்கள்.

| விபரம் | ரூபா(000ல்) |
|---|---|
| விற்பனைகள் | 1200 |
| மொத்த இலாபம் | 600 |
| செயற்பாட்டு செலவுகள் | 300 |

31.12.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு இனங்காணப்பட்ட மொத்த வருமானம், மொத்தச் செலவுகள் எவை?

| | மொத்த வருமானம் (000ல்) | மொத்தச் செலவுகள் (000ல்) |
|---|---|---|
| 1) | 1200 | 900 |
| 2) | 600 | 300 |
| 3) | 1200 | 300 |
| 4) | 600 | 900 |
| 5) | 1800 | 300 |

(………..)

09. குறித்த காலப்பகுதியில் பண்டங்கள் கடனுக்கு கொள்வனவுப்பட்டியல் விலையில் ரூபா 500 000 வியாபார கழிவு 5% குறித்த கால முடிவில் கொள்வனவு பெறுமதியில் 50% மானவை 10% காசுக்கழிவுடன் கொடுத்து தீர்க்கப்பட்டது. இக்கொடுக்கல் வாங்கல்கள் பின்வரும் கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தினை சரியாக விபரிப்பது.

| | **சொத்துக்கள் (ரூபா)** | **உரிமையாண்மை (ரூபா)** | **பொறுப்புக்கள் (ரூபா)** |
|---|---|---|---|
| 1) | + 475 000 | − | + 475 000 |
| 2) | − 237 500 | + 23 750 | −261 250 |
| 3) | + 250 000 | + 25 000 | +225 000 |
| 4) | + 261 250 | + 23 750 | + 237 500 |
| 5) | − 213 250 | + 23 750 | − 237 500 |

(………..)

❖ **10, 11 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக. இயந்திரங்களைக் கொள்வனவு செய்து உள்நாட்டில் விற்பனை செய்யும் வணிகத்துடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.**

- 2019.04.01 இல் ரூபா 1 000 000 பெறுமதியான இயந்திரங்கள் மீள் விற்பனைக்காக காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.
- 2019.04.01 இல் ரூபா 500 000 பெறுமதியான இயந்திரங்கள் நிறுவனத்தின் சொந்த பாவனைக்காகக் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆண்டுக்கு 20% நேர்கோட்டு முறையில் தேயிடப்படுகிறது.

10. 2020.03.31 இல் மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம் யாது?

| | **சொத்துக்கள் (ரூபா)** | **பொறுப்புக்கள் (ரூபா)** | **உரிமையாண்மை (ரூபா)** |
|---|---|---|---|
| 1) | 500 000 அதிகரிப்பு | 500 000 அதிகரிப்பு | - |
| 2) | 450 000 அதிகரிப்பு | 500 000 அதிகரிப்பு | 50 000 குறைவு |
| 3) | 250 000 அதிகரிப்பு | 500 000 அதிகரிப்பு | 250 000 குறைவு |
| 4) | 450 000 அதிகரிப்பு | 450 000 அதிகரிப்பு | - |
| 5) | 400 000 அதிகரிப்பு | 500 000 அதிகரிப்பு | 100 000 குறைவு |

(………..)

11. 2020.03.31 இல் மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளைப் பதிவதற்கான முதன்மை ஏடுகள் முறையே அமைவது.
   1) காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு, கொள்வனவு நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு.
   2) காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு, பொது நாட் குறிப்பேடு.
   3) கொள்வனவு நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு.
   4) சில்லறைக் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு.
   5) காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு, கொள்வனவு நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு.

(………..)

12. வெண்பா கம்பனியின் 2020.02.29 இல் உள்ளவாறான வங்கிக்கூற்று ரூபா 65 000 சாதகமான மீதியைக் காட்டியது. அத்தினத்தில் காசுக் கட்டுப்பாட்டு மீதியும், வங்கிக்கூற்று மீதியும் வேறுபடுவதற்கான ஒரே காரணியாக அமைந்தது. சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 15 000 ஆகும். இக் கம்பனியின் மார்ச் மாத கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

- காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டின் மொத்தம் ரூபா 550 000.
- வங்கி அறவீடுகள் ரூபா 20 000

**மேலதிகத் தகவல்கள் :**

i) மார்ச் மாதத்தில் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூபா 30 000.

ii) பெப்ரவரி மாதம் சமர்ப்பிக்கப்படாத காசோலை மார்ச் மாதத்தில் மாற்றப்பட்டது.

iii) மார்ச் 31 இல் வங்கிக்கூற்று மீதி ரூபா 90 000 ஆகும்.

மார்ச் மாதத்தில் காசுப் பெறுவனவு நாட்குறிப்பேட்டின் மொத்தம் யாது?

1) ரூபா 640 000 2) ரூபா 690 000 3) ரூபா 740 000

4) ரூபா 670 000 5) ரூபா 610 000 (………..)

13. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியில் குறைவை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள் பின்வருவனவற்றுள் எது எவை?

A – கடன்பட்டோர் மீதியைத் தீர்க்கும் போது கழிவொன்றினை அனுமதித்தல்.

B – கடன்பட்டோரொருவரால் திருப்பி அனுப்பிய பழுதடைந்த பொருட்கள்.

C – கடன்பட்டோர் மீதியை மீளப்பெற முடியாததால் அம்மீதியைப் பதிவழித்தல்.

1) B மாத்திரம் 2) A, B மாத்திரம் 3) A, C ஆகியன மாத்திரம்

4) B, C ஆகியன மாத்திரம் 5) A, B, C ஆகிய எல்லாம் (………..)

14. வணிகமொன்றில் 2020 மே 01 இல் சில்லறைக்காசு மீதி ரூபா 700 காணப்பட்டது. 2020 ஏப்ரல் மாதம் சில்லறைக் காசுப் பகுப்பாய்வு நிரல்களின் மொத்தம் பின்வருமாறு.

| | |
|---|---|
| தபால் செலவு | ரூ 360 |
| எழுது கருவி செலவு | ரூ 240 |
| பிரயாணச் செலவு | ரூ 285 |
| நானாவித செலவுகள் | ரூ 615 |

2020 மே மாதம் சில்லறைக்காசுக்கட்டு நிதி ரூ 500 ஆல் அதிகரிப்பு செய்யப்பட்டதற்கேற்ப 2020 மே 01 இல் கட்டுநிதி மீள் நிரப்பப்படும் தொகை யாது?

1) ரூ 1 500 2) ரூ 2000 3) ரூ 460 4) ரூ 500 5) ரூ 2 460 (………..)

15. பெறுமதி சேர்வரிக்காகப் பதிவு செய்து கொண்டுள்ள ஹிட்லர் வணிகத்தின் திரட்டப்பட்ட 2020 மார்ச் மாதத் தகவல்கள் பின்வருமாறு.

VAT 10 % உள்ளடங்களாக விற்பனைப் பெறுமதி ரூ 176 000

கொள்வனவு ரூ 90 000 VAT 10 % கணிக்கப்படல் வேண்டும்.

VAT 10 % உள்ளடங்கிய வெளித்திரும்பல் 5500

காசாகச் செலுத்திய பெறுமதி சேர்வரி 3500

2020 மார்ச் 31 இல் நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய VAT கணக்கு மீதி யாது?

1) பொறுப்பு ரூ 7500 2) சொத்து ரூ 4000 3) பொறுப்பு ரூ 4000

4) சொத்து ரூ 5650 5) பொறுப்பு ரூ 5650 (………..)

❖ ***16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.***

*16.* பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய அக்கறை செலுத்தும் பிரிவினர்களைக் குறிப்பிடுக.

A. திட்டம் சரியான முறையில் செயற்படுகின்றதா?
என்பதைத் தேடியறிதல். ……………………………………………

B. நியாயமான விலைக்குத் தரத்துடன் கூடிய
உற்பத்திப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளல். ……………………………………………

C. தொழிலின் பாதுகாப்புத் தன்மையினைப் பேணல். ……………………………………………

D. உரியவாறு வரி செலுத்துதல் இடம்பெறுகின்றதா
என்பதைத் தேடியறிதல். ……………………………………………

*17.* பின்வருவன கணக்கீட்டுச் சூழலுடன் தொடர்புடைய சூழற் காரணிகள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பொருத்தமான சூழலைக் குறிப்பிடுக.

| மாறிகள் | சூழல் |
|---|---|
| A. புதிய கணக்கீட்டு நியமமொன்று அறிமுகப்படுத்தப்படல். | …………………………………… |
| B. கணக்கீட்டு மென் பொருளை கணக்கீட்டுப் பதிவுக்கு பயன்படுத்தல். | …………………………………… |
| C. அரசு வரி வீதத்தை மாற்றம் செய்தல். | …………………………………… |
| D. கணக்கீட்டு, கணக்காய்வு நியமச்சட்டம் *1995* இல் அறிமுகப்படுத்தப்பட்டமை. | …………………………………… |

*18.* பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா எனக் குறிப்பிடுக.

A. நிதிக் கணக்கீடு கணக்கீட்டு நியமங்கள் மற்றும் சட்டதிட்டங்களுக்குட்பட்டதாகும்.
(……………… )

B. உள்ளீடு, செயன்முறை, வெளியீடு எனும் செயன்முறையின் கணக்கீட்டுச்
செயன்முறையில் இறுதிப் படிமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலாகும். (……………… )

C. பொதுப்பேரேட்டில் சொத்து, உரிமையாண்மை, பொறுப்பு போன்ற
கணக்குகள் மட்டுமே காணப்படுகின்றன. (……………… )

D. சரக்கிருப்பு அறிவுறுத்தலானது பணத்தினால் அளவிடமுடியாத
நிகழ்வொன்றாகும். (……………… )

*19.* பொதுப்பேரேட்டில் காணப்படும் பின்வரும் கணக்குகளிற்குரிய வகைகளைக் குறிப்பிடுக.

*1)* வாடகைக் கணக்கு ……………………………………………………………………

*2)* பற்றுக்கணக்கு ……………………………………………………………………

*3)* கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு ……………………………………………

*4)* உட்திரும்பல் கணக்கு ……………………………………………………………

20. வணிகம் ஒன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன. பொருத்தமான முதன்மை ஏடுகளைக் குறிப்பிடுக.

1) ரூ 300 000 பெறுமதியான உரிமையாளரின் சொந்த தளபாடங்கள் வணிகத்தில் பயன்படுத்தப்பட்டது. ……………………………………
2) வருமதியாளரிடம் பெற்ற காசோலை ரூ 12 000 வங்கியில் வைப்புச் செய்த போது வங்கியால் மறுக்கப்பட்டது. ……………………………………
3) சில்லறைக் காசாளருக்குச் செலுத்திய கட்டுநிதி மீள் நிரம்பல் ரூ 2550 ……………………………………
4) வியாபார வருமதியாளரிடமிருந்து பெறப்பட்ட காசோலை ரூ 30 000 ……………………………………

21. வணிகமொன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் காரணமாகச் சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமை என்பவற்றில் ஏற்படும் தாக்கத்தை "குறையும்" "அதிகரிக்கும்" "மாற்றமில்லை" என்றவாறு காட்டுக.

| | | **சொத்துக்கள்** | **பொறுப்புக்கள்** | **உரிமை** |
|---|---|---|---|---|
| 1) | அடட்டுறு மின்கட்டணத்தைச் செலுத்துதல் | …………………. | …………………. | …………………. |
| 2) | வங்கி மேலதிகப்பற்று உள்ள போது அறவிட்ட மேலதிகப்பற்று வட்டி. | …………………. | …………………. | …………………. |
| 3) | சில்லறைக்காசு கட்டுநிதி மீள்நிரம்பல். | …………………. | …………………. | …………………. |
| 4) | மீள் விற்பனைக்காகப் பண்டங்களைக் கடனுக்குக் கொள்வனவு செய்தல். | …………………. | …………………. | …………………. |

22. இரட்டைப் பதிவுத் தத்துவத்திற்கமைய பின்வரும் கணக்குகளில் ஏற்படும் தாக்கத்தினையும் பதிவினையும், வெற்றிடத்தில் குறிப்பிடுக.

| | **கணக்குகள்** | **தாக்கம் / விளைவு** | **பதிவு** |
|---|---|---|---|
| 1) | மூலதனக் கணக்கு | அதிகரிப்பு | …………………….. |
| 2) | விற்பனைக் கணக்கு | குறைவு | …………………….. |
| 3) | தளபாடக் கணக்கு | ………………… | செலவு |
| 4) | பற்றுக் கணக்கு | ………………… | செலவு |

23. வணிகமொன்றின் சில்லறைக்காசு கட்டுநிதி தொடர்பிலான தகவல்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| சில்லறைக்காசுக் கணக்கு நீதி | 2020.01.01 | ரூ 800 |
| | 2020.01.31 | ரூ 400 |
| கட்டுநிதி மீள் நிரப்பல் | 2020.01.01 | ரூ 2 200 |

சில்லறைக்காசு கட்டுநிதி மீள் பெறுமதி ரூ 500 ஆல் அதிகரிக்கப்படுமாயின் 2020.02.01 ம் திகதியில் மீள் நிரப்பப்படும் தொகை எவ்வளவு? ……………………………………………

24. புரேவி வணிகத்தின் 31.03.2020 இல் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ 80 000 ஆகக் காணப்பட்டது. அத்தினத்தில் காசு மீதியும் வங்கிக்கூற்று மீதியும் கீழ்வரும் காரணங்களால் வேறுபட்டன. (எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப் படுகின்றன)

- வியாபார வருமதியாளரிடம் பெற்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ 20 000 காசோலை மறுக்கப்பட்டது.
- காசுக்கணக்கில் பதியப்படாத வருமதியாளர் ஒருவரின் நேரடி வைப்பு ரூபா 50 000.
- கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 80 000 மற்றும் தேறாத காசோலை ரூபா 55 000.
- வங்கி நிலையான கட்டளையின் பேரில் செலுத்திய நிலையான கட்டளைக் குத்தகைத் தவணைக் கொடுப்பனவு ரூ 10 000 காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படவில்லை.

**வேண்டப்படுவது :-**

அ) 31.03.2020 இல் திருத்திய காசு மீதி ……………………………………………………

ஆ) 31.03.2020 இல் வங்கிக் கூற்று மீதி ……………………………………………………

25. கணக்கீட்டில் ஏற்படும் வழுக்களைத் திருத்தம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் முதன்மை ஏடு எது? ……………………………………………………..

(25x2=50 புள்ளிகள்)

## பகுதி – II

**அறிவுறுத்தல்கள் :-**

- **முதலாம் வினா உட்பட எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01. காமதேனு வணிகம் 01.01.2020 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் பெறுமதி சேர் வரிக்கெனப் பதிவு செய்யப்பட்டதாகும். இவ் வியாபாரத்தில் ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| 01.01.2020 | மூலதனமாகக் கொண்டு வந்த காசு. | 500 000 |
| 05.01.2020 | வங்கியிலிருந்து நீண்டகாலக் கடன் பெற்றது. | 400 000 |
| 06.01.2020 | மீள் விற்பனைக்கான பண்டக் கொள்வனவு.<br>(காசோலை இல : 680) | 200 000 |
| 08.01.2020 | தரகு வருமானம் பெறுவனவு | 10 000 |
| 09.01.2020 | விற்பனை வருமானம் (காசோலை இல : 2100) | 300 000 |
| 10.01.2020 | சம்பளக் கொடுப்பனவு (காசோலை இல : 681) | 37 500 |
| 13.01.2020 | கொள்வனவு (காசோலை இல : 682) | 250 000 |
| 16.01.2020 | உடமையாளர் எடுப்பனவு (காசோலை இல : 683) | 10 000 |
| 17.01.2020 | சுமதியிடம் கொள்வனவு<br>(15% VAT ரூபா 15 000 உள்ளடங்கலாக) | 115 000 |
| 19.01.2020 | குமாரிடம் கொள்வனவு<br>(15% VAT ரூபா 22 500 உள்ளடங்கலாக) | 172 500 |
| 21.01.2020 | மேலதிக மூலதனமாக ஈடுபடுத்திய காசு | 200 000 |
| 22.01.2020 | விற்பனை மூலமான பெறுவனவு<br>(காசோலை இல : 340) | 100 000 |
| 23.01.2020 | மதனுக்கு விற்பனை<br>(15% VAT ரூபா 37 500 உள்ளடங்கலாக) | 287 500 |
| 24.01.2020 | தரகு வருமானப் பெறுவனவு | 10 000 |
| 25.01.2020 | காப்புறுதிக் கொடுப்பனவு<br>(காசோலை இல : 684) | 30 000 |
| 26.01.2020 | சேந்தனுக்கு விற்பனை<br>(15% VAT ரூபா 52 500 உள்ளடங்கலாக) | 402 500 |
| 27.01.2020 | வங்கிக்கடனின் ஒரு பகுதி தீர்ப்பனவிற்காகக் கொடுப்பனவு<br>(காசோலை இல : 685) | 50 000 |
| 28.01.2020 | சுமதியிடமிருந்து ரூ 5000 கழிவு பெற்று<br>ரூ 60 000 கொடுப்பனவு செய்யப்பட்டது.<br>(காசோலை இல : 686) | |
| 29.01.2020 | மதனுக்கு ரூ 10 000 கழிவு அனுமதிக்கப்பட்டு<br>ரூ 110 000 பெறப்பட்டது.<br>(காசோலை இல : 1501) | |
| 30.01.2020 | குமாரிடமிருந்து ரூ 15 000 கழிவு பெற்று<br>ரூ 100 000 கொடுப்பனவு செய்யப்பட்டது.<br>(காசோலை இல : 687) | |
| 31.01.2020 | சேந்தனுக்கு ரூ 12 000 கழிவு அனுமதிக்கப்பட்டு<br>ரூ 188 000 காசு பெறப்பட்டது. | |

**குறிப்பு :-** காசு விற்பனை, காசுக் கொள்வனவு தொடர்பாகப் பெறுமதி சேர் வரியைப் புறக்கணிக்க கடன் கொள்வனவு, கடன் விற்பனைக்கு மட்டுமே 15% VAT கருத்திற்கொள்க.

**வேண்டப்படுவது :-**

1. காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு.
2. காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு.
3. கொள்வனவு நாட்குறிப்பேடு.
4. விற்பனை நாட்குறிப்பேடு.
5. பொதுப்பேரேட்டுக் கணக்குகள்.
6. 31.01.2020 இல் உள்ளவாறான பரீட்சை மீதி.

*(40 புள்ளிகள்)*

02. மிதிலா வணிகம் பெறுமதி சேர் வரிக்காகப் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். 2020 மே மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்திய தாக்கம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

(15% VAT எனக்கொள்க)

ரூபா "000" இல்

| இல | சொத்துக்கள் | | | | பொறுப்புக்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம் பொறி உபகரணம் | இருப்பு | வியாபார வருமதி | காசும் காசுக்குச் சமமானவை | வியாபார க.கொடு | அட்டுறு செலவுகள் | சென்மதி VAT | உரிமை யாண்மை |
| மீதி | 400 | 200 | 50 | 150 | 170 | 70 | 05 | 555 |
| 01. | | - 15 | + 23 | | | | + 03 | + 05 |
| 02. | | - 80 | | + 138 | | | + 18 | + 40 |
| 03. | | + 20 | - 34.5 | | | | - 4.5 | - 10 |
| 04. | | + 60 | | | + 69 | | - 9 | |
| 05. | | | - 23 | + 23 | | | | |
| 06. | | | | - 20 | - 20 | | | |
| 07. | | | | - 82 | | - 70 | | - 12 |
| 08. | - 2 | | | | | | | - 2 |
| | 398 | 185 | 15.5 | 206 | 216 | - | 12.5 | 576 |

**குறிப்பு :-** உரிமையாளர் பற்று எதுவும் இம்மாதத்தில் இடம்பெறவில்லை.

**வேண்டப்படுவது.**

1. 01 – 08 வரையான கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளைப் பெறுமானங்களுடன் விபரிக்குக.
2. 01 – 8 வரையான கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளைப் பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவு.
   (விளம்பல் அவசியமில்லை)

*(20 புள்ளிகள்)*

03. வியாபாரமொன்றின் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது 31.03.2020 இல் ரூபா 24 000 செலவு மீதியைக் காட்டியது. இத்தினத்தில் வங்கிக்கூற்றானது பிறிதொரு மீதியைக் காட்டியது. காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை வங்கிக்கூற்று மீதியுடன் ஒப்பிட்ட போது பின்வரும் தகவல்கள் தெரியவந்தன.

1) வழங்குனரொருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 100 000 இற்கான காசோலையொன்று வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.

2) வங்கிக் கூற்றின்படி காசோலை புத்தகக்கட்டணம் ரூபா 1600, வங்கிக்கட்டணம் ரூபா 4000, நிலையான கட்டளைக் கொடுப்பனவு காப்புறுதி ரூபா 16 000, நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 40 000 ஆகியன காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

3) வைப்புச் செய்யப்பட்ட காசோலைகளில் ரூபா 120 000 இன்னும் வசூலிக்கப்படவில்லை.

4) வங்கியினால் திருப்பி அனுப்பிய ரூபா 36 000 பெறுமதியான காசோலை தொடர்பில் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் எதுவித பதிவும் செய்யப்பட்டிருக்கவில்லை. இக் காசோலையானது கடன்பட்டோன் ஒருவரிடமிருந்து பெறப்பட்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது.**

1. 31.03.2020 இல் உள்ளவாறான காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கின் சீராக்கிய மீதி.
2. 31.03.2020 இல் வங்கி இணக்கக்கூற்று.
3. மறுக்கப்பட்ட காசோலையைப் பதிவதற்கான நாட்குறிப்பு பதிவு.

(20 புள்ளிகள்)

04. செம்பருத்தி வணிகத்தின் 2020 ஜனவரி மாத கடன்பட்டோர் தொடர்பான சரியான தகவல்கள் பின்வருமாறு.

| | கடன் பட்டோர் | 01.01.2020 இல் மீதிகள் | விற்ப னைகள் | பெற்ற காசு | கொடுத்த கழிவு | உட் திரும்பல் | 31.01.2020 இல் மீதிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | காவேரி | 18 000 | 42 000 | 40 000 | 1 500 | 7 500 | ? |
| 2) | ஆதி | 12 000 | 53 000 | 43 000 | 2 600 | 3 700 | ? |
| 3) | பார்வதி | 8 000 | 34 000 | 25 000 | 1 400 | 2 300 | ? |
| 4) | அகிலா | 10 000 | 61 000 | 52 000 | 2 500 | 6 500 | ? |
| | **மொத்தம்** | **48 000** | **190 000** | **160 000** | **8 000** | **20 000** | **?** |

**வேண்டப்படுவது.**

1. பொதுப்பேரேட்டில் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கினைத் தயாரிக்குக.
2. கடன்பட்டோர் பேரேட்டினைத் தயார் செய்து பட்டியல் மீதியைக் கணிப்பிடுக.

(20 புள்ளிகள்)

05. நேத்ரா வியாபாரத்தின் *01.01.2020* இல் சில்லறைக்காசுக் கணக்கு மீதி ரூபா *3000* ஆகயிருந்தது. *2020* ஜனவரி மாதத்தில் சில்லறைக் காசாளருடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு :

*01.01.2020* இல் சில்லறைக் காசாளருக்கு ரூபா *17 000* காசு மீள்நிரப்பப்பட்டது. அம்மாதத்தில் இடம்பெற்ற கொடுப்பனவு விபரம் வருமாறு:

| திகதி | சி.கை. இலக்கம் | விபரம் | பெறுமதி |
|---|---|---|---|
| 02.01.2020 | 001 | எரிபொருள் செலவு | ரூபா 1 600 |
| 03.01.2020 | 002 | ஊழியரின் பிரயாணச் செலவு | ரூபா 2 300 |
| 04.01.2020 | 003 | தபால் செலவு | ரூபா 1 200 |
| 04.01.2020 | 004 | பிரயாணச் செலவு | ரூபா 3 200 |
| 07.01.2020 | 005 | துப்பரவாக்கல் செலவு | ரூபா 1 100 |
| 09.01.2020 | 006 | எரிபொருள் செலவு | ரூபா 2 300 |
| 14.01.2020 | 007 | துப்பரவாக்கல் செலவு | ரூபா 1 100 |
| 20.01.2020 | 008 | அஞ்சல் செலவு | ரூபா 120 |
| 22.01.2020 | 009 | கடன்கொடுத்தோரான உதயனுக்குச் செலுத்தியது. | ரூபா 1 300 |
| 24.01.2020 | 010 | கடித உறை | ரூபா 1 200 |
| 28.01.2020 | 011 | முச்சக்கரவண்டி வாடகை | ரூபா 1 200 |
| 01.02.2020 | - | கட்டுநிதி மீள்நிரப்பல் செய்யப்பட்டது. | |

**வேண்டப்படுவது.**

1. எரிபொருள் செலவு, பிரயாணச் செலவு, தபால் செலவு, துப்பரவாக்கல் செலவு, ஏனைய கொடுப்பனவு ஆகிய பகுப்பாய்வு நிரல்களைக் கொண்ட சில்லறைக் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு.
2. சில்லறைக் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டின் பகுப்பாய்வு நிரல்களின் மொத்தத்தினைப் பொதுப்பேரேட்டில் காணப்படுகின்றவாறு பேரேட்டுக் கணக்குகளிற்கு மாற்றிக் காட்டுக.

(20 புள்ளிகள்)